ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2470/38 - 2026 ජනවාරි මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.01.08

2470/38 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தின், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின், இலக்கம் 417 உடுவாவல மேற்கு கிராம அலுவலர் பிரிவின், உடுவாவல (ஒரு பகுதி) கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட MAHA/HRS/2023/384 மற்றும் 2023.07.20 ஆந் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு ‘A’ – கலஹிடியாவ வத்த – விஸ்தீரணம்: 0.0107 ஹெக்டயார்**

வடக்கு: எஸ். ஏ. மனம்பேரி உரித்துகோரும் கலகஹிடியாவ வத்த மற்றும் ஓடை; கிழக்கு: பீ. ஜீ. ஏ.ஜயசூரிய மற்றும் இன்னும் சிலர் உரித்துகோரும் கலஹிடியாவவத்த. பீ.ஜீ. கிரா உரித்துக்கோரும் கலஹிடியாவ வத்த மற்றும் ஐ. ஜீ. லீலாவதி உரித்துக்கோரும் கலஹிடியாவ வத்த; தெற்கு: ஐ.ஜீ லீலாவதி உரித்துக்கோரும் கலஹிடியாவ வத்த மற்றும் உஸ்கெடேஹேன; மேற்கு: எஸ். ஏ. மனம்பேரி உரித்துகோரும் கலகஹிடியாவ வத்த.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/18/2022/WS/55
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்தமெதுர”,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, நவெம்பர் 21.

EOG 01 - 0074

1A - G46041 - 05 (2026/01)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.